பக்கங்கள்:-22

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 28 | புதன்கிழமை | 12.03.2025 | அதிர்வு 219 |
|---|---|---|---|---|---|

## பெண் வைத்தியரை அடையாளப்படுத்தாதீர்

### சுதந்திர ஊடக இயக்கம் சகலரிடமும் வேண்டுகோள்



பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான பெண் 06

# முன்னாள் இராணுவச் சிப்பாயால் பெண் வைத்தியர் வன்கொடுமை

## சந்தேகநபரைக் கைது செய்ய 5 பொலிஸ் குழுக்கள் களத்தில்



(ந.லோகதயாளன்)

“அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேவையாற்றும் பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற நபர் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். சந்தேகநபர் வெகு விரைவில் கைது செய்யப்படுவார்.”

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேவையில் இருந்த பெண் வைத்தியர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றியதாவது, “முன்னாள் பொலிஸ்மா 06

# நாடளாவிய ரீதியில் 24 மணி நேரம் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

## பெண் வைத்தியர் மீதான பாலியல் வன்கொடுமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து



(ந.லோகதயாளன்)

**பெண் வைத்தியர் மீதான பாலியல் வன்கொடுமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை 8 மணி முதல் நாடு தழுவிய 24 மணி நேரப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.** 06

# தென்னக்கோன் தப்பிக்க முடியாது! வெகுவிரைவில் கைது செய்வோம்!!

## அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த தெரிவிப்பு

“முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் வெளியே வரும் வரை காத்திருப்பது எமது நோக்கமல்ல. கூடிய விரைவில் அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதே எமது தேவையாகும். முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் பாதுகாப்பில் அவர் உள்ளாரா என்பது எமக்குத் தெரியாது.”

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் 06






உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான மூன்றரை நாள் கால அவகாசம் இன்னும் ஐந்து நாள்களில் தொடங்குகின்றது. அதற்கு இடையில் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் தங்களின் வேட்பாளர் பட்டியல்களை இறுதி செய்து விட வேண்டும்.

வடக்கில், தமிழர் தரப்பைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கட்சிகள் நான்கு அணிகளாகப் பிரிவது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது.

இதில் பெரிய கட்சியான தமிழரசு அனேகமாக தனி ஆவர்த்தனம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற சங்கு அணியைப் பொறுத்தவரை ஏற்கனவே இருக்கின்ற கட்சிகளில் சில சமயம் சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி இம்முறை அந்தக் கூட்டில் இருந்து விலகக் கூடிய அல்லது தள்ளி நிற்கக்கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன. இந்தக் கூட்டில் சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் 06

# தொழில் கோரும் பட்டதாரிகள் தொடர்பில் அரசாங்கம் அவதானம்

தொழில் கோரும் பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமஸாசவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவிக்கையில்,

“இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சு மாத்திரமின்றி ஏனைய சில அமைச்சுகளிடமிருந்து தகவல்கள் சேகரிக் கப்பட்டுக் கலந்துரையாடி நிரந்தர தீர்வினை முன்வைப் பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

வரவு - செலவு திட்டம் தொடர்பான குழுநிலை விவாதம் நிறைவடைவதற்குள் இந்த விடயம் தொடர்பில் மேலதிக தகவல் வழங்கப்படும்.

தொழில் கோறும் பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆரா யப்பட்டு வருகிறது.

இது ஒரு தேசிய பிரச்சினையாகக் காணப்படுகின்ற



போதிலும் அவசரமாகத் தீர்வுகளை முன்வைக்க முடி யாது.

கடந்த அரசாங்கத்தினால் இந்த பிரச்சினைக்கான தீர்வுகள் முன்வைக்கப்படாமையினாலேயே இந்த விடயம் தொடர்பில் தற்போது ஆராய வேண்டியுள்ளது.” - என்றார்.

# பெண் வைத்தியர் பாலியல் துஷ்பிரயோகம் நடவடிக்கை எடுக்குமாறு சஜித் வலியுறுத்தல்




அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், இந்த சம்பவத்தினால் ஏனைய வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்கள் அச்சத்தில் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட் டார்.

மேலும் அரச வைத்தியசாலையில் பணியில் இருக்கும் வைத்தியர் ஒருவர் இலக்கு வைக்கப்படுவது மிகவும் கவலையளிப்பதாகவும், பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பாக பாரிய கேள்வி எழுந்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

# அரச சேவையில் புதிய நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி

9 அமைச்சுகள் மற்றும் 2 மாகாண சபைகளுக்காக 5882 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இவற்றில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளு மன்ற விவகார அமைச்சுக்கு 2500 பேரும், பொது நிர் வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்கு 1615 பேரும் ஆட்சேரப்பு செய்யப்படவுள்ள னர்.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் நிறுத் தப்பட்டிருந்தன.

இந்தநிலையில், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த தன் பின்னர், அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு நடவடிக் கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பிரதமரின் செய லாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அதற்கமைய, இந்த குழு உரிய கலந்துரையாடல்களை மேற்கொண்டு, இடைக்கிடையே ஆட்சேரப்பு தொடர்பில் அறிக்கைகளை முன்வைத்து வருகிறது.

அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை



மீளாய்வு செய்து தேவைகள், முன்னுரிமைகள் அடிப்படையில் கட்டாயமாக ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய அளவை அடை யாளம் அந்த குழுவினால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது.



# மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மூன்று புதிய நீதிபதிகள் நியமனம்

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மூன்று புதிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

அதன்படி, மேல் நீதிமன்ற நீதிபதிகளான அன்னலிங்கம் பிரேமசங்கர், டபிள்யூ.கே.எஸ்.யு. பிரேமசந்திர, கே. பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குப் புதிய நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.





# முன்னாள் ஜனாதிபதி மைத்திரிக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை



எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு உயர் நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

ரோயல் பார்க் கொலை சம்பவம் தொடர்பில் மரணதண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஷ்ராமந்த ஜயமகவிற்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி பொதுமன்னிப்பை இரத்துச்செய்து ஒரு மில்லியன் ரூபாவை நட்டஈடாக செலுத்துமாறு நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியமைக்கான காரணங்களை முன்வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூன் 6 ஆம் திகதி மகளிர் மற்றும் ஊடகங்கள் ஒன்றியம் தாக்கல் செய்த மனு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ரோயல் பார்க் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட முறைமையானது அரசமைப்பிற்கு முரணானது என குறிப்பிட்டு பொதுமன்னிப்பை வலுவிழக்கச் செய்து உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியதன் ஊடாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக வழக்கின் தீர்ப்பை வழங்கிய நீதியரசர்கள் குழாம் அறிவித்தது.

அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஒருமாத காலத்திற்குள் ஒரு மில்லியன் ரூபா நட்டஈட்டு தொகையை செலுத்த வேண்டுமெனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, மைத்திரிபால சிறிசேனவால் இதுவரையில் அந்த நட்டஈட்டு தொகை செலுத்தப்படவில்லை என தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேனவை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நிதியைச் செலுத்த தவறியமைக்கான காரணத்தை மன்றில் விளக்குமாறும் குறிப்பிட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் அழைப்பாணை விடுத்துள்ளது.

# பாழடைந்த கிணற்றில் இருந்து மூன்று கைத்துப்பாக்கிகள் மீட்பு





பாழடைந்த கிணற்றில் இருந்து இரண்டு வெளிநாட்டுத் துப்பாக்கிகள் உள்ளடங்களாக மூன்று கைத்துப்பாக்கிகள் நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கடுவலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிவிட்ட பகுதியில் பொலிஸார் முன்னெடுத்திருந்த விசேட சோதனை நடவடிக்கையின்போதே இந்தக் கைத்துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான இடம் ஒன்றில் உள்ள சுமார் 45 அடி ஆழமான கிணற்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொலித்தீன் பை ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்போது அந்தப் பையினுள் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு கைத்துப்பாக்கிகள், ரிவோல்வர் வகை கைத்துப்பாகி ஒன்று, அந்தத் துப்பாக்கிகளுக்கான 153 தோட்டாக்களும் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

துப்பாகிகள் பாதுகாப்பாகப் பல பொலித்தின் கைபகளினுள் இட்டே மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், துப்பாக்கிகளை மறைத்து வைத்த சந்தேகநபர் தொடர்பில் கடுவலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மீளாய்வு பெறுபேறுகள் வெளியாகின

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் மீளாய்வு பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. பரீட்சைகள் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த பெறுபேறுகளை றறற.னழநநெவள.டம என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என குறிப்பி டப்பட்டுள்ளது.

# யாழில் குற்றவாளிகளைக் காப்பாற்ற பணம் வசூலித்தாராம் பொலிஸ் அதிகாரியின் மகனைக் கைது செய்ய உத்தரவு!

குற்றச்செயல்களில் ஈடுபட்ட நபர்களை சட்டத்தின் பிடியில் இருந்து காப்பாற்றி விடுவார் எனத் தெரிவித்து அதற்காகப் பணம் பெற்று வந்தவர் எனக் கூறப்படும் பொலிஸ் உயர் அதிகாரியின் மகனைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு, யாழ். நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்குக் கட்டளையிட்டுள்ளது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிவரின் மகன், பொலிஸ் நிலையங்களுடன் வழக்குகளை முடிப்பதாக கூறி பணம் பெற்று வந்தமை தொடர்பில் யாழ். மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வந்த நிலையில், மகன் தலைமறைவாகி உள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் யாழ் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்த நிலையில், சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துமாறு மன்று பொலிஸாருக்குக் கட்டளையிட்டுள்ளது.

அதேவேளை சந்தேக நபரின் தந்தையான பொலிஸ் அதிகாரி முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# யானை தாக்கி மீனவர் மரணம்



காட்டு யானை தாக்கி மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாத்தறை, கிரிந்த, அதகலவெல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

திஸ்ஸமஹாராமை பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய மீனவரே உயிரிழந்துள்ளார்.

இவர் மீன்பிடித் தொழிலுக்காக மேலும் இரண்டு நபர்களுடன் இணைந்து கிரிந்த துறைமுகத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது வீதியில் இருந்த காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்குப் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கட்சி இணைவது பெரும்பாலும் நிச்சய மாகிவிட்டது.

விக்னேஸ்வரன் தலைமையிலான மணிவண்ணன் அணி, மான் சின்னத் தில் தனித் தவில் வாசிக்க வேண்டி இருக் கும் என்று தோன்றுகின்றது.

அடுத்த தரப்பு கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. அந்தக் கூட்டுக்குள் புதிய தரப்புகள் களமிறங்கக்கூடிய சாத் தியங்கள் தெரிகின்றன.

ஏற்கனவே சாவகச்சேரியில் தனித்து சுயேச்சையாகக் களமிறங்க முடிவு செய்திருந்த அருந்தவபாலன் ஆசிரியர் தலைமையிலான அணி கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் சைக்கிள் சின்னத் தில் டபிள்ஸ் ஏறத் தயாராகிவிட்டது.

ஜனநாயக தமிழரசு என்று கடந்த தேர்தலில் ஒன்றுபட்டு நின்ற தரப்புகள், இப்போது துண்டுபட்டு பல பக்கமும் செல்லக்கூடிய சாத்தியங்கள் தென்படு கின்றன.

ஏற்கனவே ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜாவும் அவரது சகாக்களும் கஜேந்திரகுமார் பக்கம் நட்புக்கரம் நீட்டி விட்டனர் என்று ஒரு தகவல் உண்டு.

க(ல்)லாநிதி அகிலன் முத்துக்குமார சுவாமி, குணாளன் போன்றவர்களும் அந்தப் பக்கம் போவதற்கான சாத்தி யங்கள் தென்படுகின்றன.

ஆனால் இந்தக் குழுவில் உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அணியினரை கஜேந்திர குமார் கட்சி அரவணைக்குமா, அவர் கள் அந்தப் பக்கம் போவார்களா என்பது தெரியவில்லை. எனினும் இந்த அணி யினர் தங்களோடு நிற்பார்கள் என்று சங்கு தரப்பு நம்புகின்றது என விடய மறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ரெலோவிலிருந்து கழற்றி விடப்பட்ட மாதிரி சங்குக் கூட்டணியிலிருந்து கழற்றி விடப்படும் நெருக்கடியை சிவாஜிலிங் கம் – சிறிகாந்தா இணை தனக்குத் தானே உருவாக்கியிருப்பதாகக் கூறப்படு கின்றது. அந்த நிலைமை நேர்ந்தால் இந்த இணையையும் சைக்கிள் கூட்டணி மேலதிக 'வெயிட்'டாகக் கட்டிக் கொண்டு தேர்தல் சவாரி போகத் தயாராகுமா என்பது தெரியவில்லை.

இந்தத் தரப்புகள் எல்லாம் சைக்கிள் சின்னத்தில் அணிசேரக் கொள்கை ரீதியாக ஒரே ஒரு விடயம் பொதுவாக – அடிப்படையாக – உண்டு. அது, இவர்கள் அனைவருமே சுமந்திரனை எதிர்த்து நிற்கும் தரப்பினர். அதனால் அவர்களை கஜேந்திரகுமாரும் இப் போதைக்கு அரவணைத்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கலாம். ஆனாலும், அந்தக் கட்சியில் நிலவும் ஜனநாயகப் பண்புகள்(?), அடிக்கடி கிளர்ந்தெழுந்து, தத்தமது பாட்டில் கொள்கைக் கோட்பாட்டு அறிக்கைகளை விடும் இந்த ஜனநாய கத் தமிழரசு மற்றும் சிவாஜிலிங்கம் – சிறிகாந்தா தரப்பினருக்கு எத்தகைய பிரதிபலிப்பை கால கதியில் காட்டும் என்பது சர்ச்சைக்குரியதாகவே இருக்கும்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் நிலைப்பாட்டை அதன் தலைவர் ஐங்கர நேசன் இன்னமும் வெளிப்படையாகக் கோடி காட்டவில்லை. அவர் சங்குக் கூட் டணி பக்கமோ, மான் சின்னப் பக்கமோ தலை வைத்தும் படுக்க மாட்டார் என்று அவரது கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. அதே சமயம் சைக்கிளை ஆதரித்து, வீட்டை எதிர்த்தோ அல்லது வீட்டை ஆத ரித்து, சைக்கிளை எதிர்த்தோ ஒரு நிலைப் பாட்டை அவர் எடுக்காமல் தவிர்க்கக் கூடும் என்றும் தெரிகிறது.

இரண்டு தரப்புகளுக்கும் மத்தியில் இரண்டையும் தமிழ் தேசிய அணி களாக அங்கீகரித்து, ஒரு புதிய நிலைப் பாட்டை அவரது தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் எடுத்தாலும் ஆச்சரியப்படு வதற்கு இல்லை.

இதற்கிடையில், மன்னாரில் சங்குக் கூட்டணியில் ரெலோதான் பெரிய கட்சி. ரெலோ முகாம் காலியாகி, மான் சின்னம் அங்கு கொழுத்து வருவதாகவும் ஒரு தகவல் உண்டு. அது பற்றிப் பின்னர் பார்ப்போம்.

எது, எப்படியாயினும் அடுத்து வரும் இரண்டொரு தினங்களில் தேர்தல் கூட்டுக்களுக்கான சமையல் பூர்த்தி யாகி விடும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

---

## பெண் வைத்தியரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வைத்தியரின் அடையாளத்தைப் பாது காத்து பொறுப்புடன் செய்திகளை வெளி யிடுமாறு அனைத்து அச்சு மற்றும் இலத் திரனியல் ஊடகங்களிடமிருந்து எதிர் பார்க்கின்றோம் என்றும், மேலும் சம்பவம் குறித்த தகவல்களை வெளியிடும் சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளங்கள் பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின் றோம் என்றும் சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சுதந்திர ஊடக இயக்கம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கை யில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"குற்றவியல்சட்டத்தின்365(ஏ)பிரிவின் படி, பாலியல் குற்றங்களுக்குள்ளா கிய குழந்தைகள் மற்றும் பெண்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவது குற்றமாகும். இதற்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைதண்டனை விதிக்கலாம்.

இத்தகைய துயரமான சம்பவங்களை ஊடகங்கள் விவரிக்கும்போது, பாதிக்கப் பட்டவரும் அவருடைய நெருங்கியவர்க ளும் மேலும் மனவேதனைக்குட்படா மல் தடுப்பதற்காக ஊடக நெறிமுறை களை பின்பற்ற வேண்டும். இதனை மீற முடியாத ஒரு சமூகப் பொறுப்பாக ஊட கங்கள் ஏற்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது தற்போது பொலிஸார் எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவாலாகும் என்பதை மீண்டும் வலியுறுத்தும் அதேவேளை, புலன் விசாரணைகள் தடம் புரளாமல் இருப்பதை உறுதி செய்யுமாறும், தனது பணியைச் சிறப்பாகச் செய்ததற்காக ஊடகவியலாளர்களுக்கு எதிராக குறு கிய நோக்குடன் பழிவாங்கும் நடவடிக் கைகளைத் தவிர்க்குமாறும் குற்ற விசா ரணைப் பிரிவு மற்றும் பொலிஸ் துறை யைச் சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக் கொள்கின்றது.

தரிந்து ஜயவர்தன கைது செய்யப்பட் டால், அவரது உரிமைகள் மற்றும் பாது காப்பைப் உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப் போம் என்றும் சுதந்திர ஊடக இயக்கம் எச்சரிக்கின்றது.

உயர்ந்த ஊடகக் கலாச்சாரத்தை உரு வாக்கும் எங்கள் இடையறாத போராட் டத்தை வெற்றிப்படுத்த, இத்தகைய சூழ் நிலைகளில் பொறுப்பான ஊடகப் பயன் பாடு மிகவும் முக்கியமானது. மேலும், சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்டவருக்கான நீதியை உறுதி செய்வதிலும் ஊடகங்கள் தலையிடும் பொறுப்பு கொண்டிருக்க வேண்டும்.

பெண்கள் தினக் கொண்டாட்டங்க ளுக்கு அப்பாற்பட்டு, சம்பவத்துக்குப் பொறுப்பானவர்களை உடனடியாகக் கைது செய்து நீதியை நிலைநாட்டுவது அனைத்து பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய ஒரு முக்கியமான நடவடிக்கையாக அமையும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளது.

---

## நாடளாவிய ரீதியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அனுராதபுரம் போதனா வைத்தியசாலை யில் சேவையாற்றும் பெண் வைத்தியர் நேற்றுமுன்தினம் மாலை தனது கடமை களை முடித்துவிட்டு வைத்தியர் விடுதிக் குச் சென்ற போது முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரால் பாலியல் வன்கொடு மைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சந்தேகநபரைக் கைது செய்யுமாறு கோரி யும் அரச வைத்தியர்கள் நாடு தழுவிய 24 மணி நேரப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இருப்பினும், மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை, குழந்தைகள் வைத் தியசாலை மற்றும் சிறுநீரக வைத்திய சாலை உள்ளிட்ட அத்தியாவசிய சேவை களில் எந்த மாற்றமும் இருக்காது என் றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

---

## தென்னக்கோன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பான சகல தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் தேடுதல் நடவடி க்கைகளை முன்னெடுத்துள்ளனர். தேச பந்து தென்னக்கோன் கைது செய்யப்பட வேண்டும் என்பதே அரசின் இலக்காகும்.

தேசபந்து தென்னக்கோன் மாத்திர மின்றி இன்னும் சிலர் இவ்வாறு கைது செய்யப்படவுள்ளனர். ஆனால், தேசபந்து தென்னக்கோன் எங்கிருக்கின்றார் என்பது எமக்குத் தெரியாது.

அவர் தொடர்பான தகவல்கள் தெரிந் தவர்கள் அவற்றைப் பொலிஸாருக்கு வழங்க வேண்டும். அது மக்களினதும் ஊடகங்களினதும் பொறுப்பாகும்.

அவர் விரைவில் கைது செய்யப்படு வார் என்று எதிர்பார்க்கின்றோம். எனி னும், தேசபந்து தென்னக்கோன் சரண டைவதற்கென கால அவகாசம் எதுவும் வழங்கப்படவில்லை.

அவரைக் கண்டுபிடிப்பதற்குப் பல பொலிஸ் குழுக்கள் தேடுதல் பணிக ளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தேசபந்து தென்னக்கோன் வெளியில் வரும் வரை காத்திருப்பது எமது நோக்கமல்ல. முடிந்த ளவு விரைவாக அவரைக் கைது செய்து, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதே எமது தேவையாகும்." – என்றார்.

---

## முன்னாள் இராணு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர் பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத் துக்குக் கிடைக்கப் பெற்ற நம்பத் தகுந்த தகவல்களுக்கு அமைவாகவே மாத்த றைப் பகுதியில் வீடு ஒன்று சோதனை செய்யப்பட்டது.

குற்றப் புலனாய்வு அதிகாரிகள் அந்த வீட்டுக்குச் சென்று தமது அடை யாள அட்டையைக் காண்பித்து, தான் வருகை தந்தமைக்கான காரணத்தைக் குறிப்பிட்டனர். வீட்டைச் சோதனையிடுவ தற்கு வீட்டில் இருந்தவர்கள்

07

## முன்னாள் இராணு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதி வழங்கினர்.

முன்னெடுக்கப்படும் சோதனை நடவடிக்கைகள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நம்பத் தகுந்த தகவல்களுக்கு அமைவாகவே நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிடைக்கப் பெறும் தகவல்களை அலட்சியப்படுத்த முடியாது.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் எடுத்துரைத்தார். இந்தச் சம்பவம் கவலைக்குரியது.

பெண் வைத்தியரைப் பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைது செய்வதற்கு ஐந்து பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றன.

அந்தப் பெண் வைத்தியர் தனது கடமைகளை முடித்துவிட்டு வைத்தியர் விடுதிக்குச் சென்றுகொண்டிருந்தபோதே பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை (நேற்றுமுன்தினம்) மாலை 6.30 – 7 மணிக்கு இடைப்பட்ட வேளையில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற நபர் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார். விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன." – என்றார்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# விரைந்து செயற்படுக!

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பெண் வைத்தியரை ஒருவரைக் கத்திமுனையில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்தார் எனக் கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை உடனடியாகக் கைதுசெய்யவேண்டும்என்றுபோராட்டத்தில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயத்தை ஒட்டி இன்று நாடு முழுவதும் 24 மணிநேர பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி இன்று காலை 8 மணி முதல் நாடு தழுவிய 24 மணி நேர பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனால் நாட்டில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் இன்று அவசர - அத்தியாவசிய - மருத்துவ சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் அனைத்தும் முடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட 32 வயது தமிழ்ப் பெண் வைத்தியர் நேற்று முன்தினம் மாலை தனது கடமைகளை முடித்துவிட்டு, அரசால் வைத்தியர்களுக்காக வழங்கப்பட்ட அவரின் தங்குமிடத்துக்குத் சென்றுள்ளார்.

பின்னர் மாலை 6:30 மணி முதல் 7 மணி வரையான காலப்பகுதியில் அடையாளம் தெரியாத ஒருவர் அவரின் தங்குமிடத்துக்குள் சென்று, கத்தியைக் காட்டி மிரட்டி, பாலியல் வன்கொடுமை செய்தார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பணி முடிந்து வைத்தியசாலை விடுதியில் வைத்தியர் தங்கியிருந்தாலும், அச்சமயத்தில் அவசர அழைப்புகள் வந்தால் மருத்துவ விடுதிக்குத் திரும்பி, தமது உயர்ந்த மருத்துவ சேவைகளை மக்களுக்கு - நோயாளர்களுக்கு - வழங்க வேண்டிய மருத்துவ சேவைக் கடப்பாடு மருத்துவர்களுக்கு உண்டு. அந்த வகையில் இந்தப் பெண் வைத்தியர் வைத்தியசாலையில் அன்றைய பணி நேரம் முடிந்து விடுதிக்குத் திரும்பியிருந்தார் எனினும், கடமைக்கு அழைக்கப்படக் கூடிய நேரத்திலேயே அவர் இந்த அனர்த்தத்தை எதிர் கொண்டிருக்கின்றார்.

அந்தவகையில்பார்த்தால்கடமை நேரத்தில் வைத்தியசாலை வளாகத்துக்குள் வைத்து இந்தக் கொடூரம் இளம் பெண் வைத்தியர் மீது புரியப்பட்டிருக்கின்றது.

“பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். சந்தேக நபர் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார்.”- எனப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று நாடாளுமன்றில் தெரிவித்திருக்கின்றார்.

விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. சந்தேகநபரைக் கைது செய்வதற்கு ஐந்து பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

குற்றம் இழைத்த நபரை மடக்குவதில் பொலிஸார் மெத்தனம் காட்டுவார்களாயின் வைத்தியர்களின் இன்றைய ஒரு நாள் வேலை நிறுத்தம் மேலும் நீடித்து, வைத்திய சேவைகள் நாடளாவிய ரீதியில் முடங்கும் ஆபத்து உண்டு. பொலிஸாரின் விரைந்த நடவடிக்கையை முழு நாடும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.








# மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி அநுரவுக்கும் இடையில் சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

மதுவரித் திணைக்களம் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் இந்த ஆண்டின் வருமான இலக்குகளை அடைவது போன்ற விடயங்களை நோக்கமாகக் கொண்டு இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

வரி சேகரிப்பில் செயல்திறன் மற்றும் நியாய போக்கு என்பவற்றை உறுதி செய்வதற்காக மதுவரித் திணைக்களத்தின் செயல்பாடுகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இணைப்பது குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

மதுபானம் மற்றும் புகையிலைத் தொழிற்துறையை முறையாக ஒழுங்குபடுத்துவதன் மூலம் அரச வருமானத்தை அதிகரித்தல், சட்டபூர்வமான வருமானத்தை உருவாக்குவதற்கு வசதிகளை வழங்குதல், சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கக் கூடியவற்றை அமுல்படுத்தல், சட்டவிரோத மதுபானம், அபாயகர ஔடதங்கள் மற்றும் மனோவியல் ஔடதங்களை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக தீவிர விழிப்புணர்வுத் திட்டங்களை செயல்படுத்துதல், தரமற்ற மதுபானங்களை அருந்துவதால் ஏற்படும் உடல்நலக் கேடுகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதை உறுதி செய்தல் மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு உதவுவதற்காக, நாட்டில் மதுபானம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட மதுபானங்களை செயற்திறன் மிக்கதாகவும் பயனுள்ள முறையிலும் கட்டுப்படுத்துவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மூலோபாய மற்றும் செயல்பாட்டு மட்டங்களில் பயனுள்ள முடிவுகள் எடுப்பது மற்றும் முகாமைத்துவ முறைமைகள் ஊடாக வருமானத்தை சேகரிப்பது மற்றும் வருமானப் பாதுகாப்பு குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.













# உலக சந்தையில் இலங்கை தொழில் முனைவோருக்கான இடத்தை எட்டுவதற்கு தேவையான ஆதரவை வழங்குவேன்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

இலங்கை தொழில்முனைவோர் உலக சந்தையில் தங்கள் பங்கைக் கைப்பற்றுவதற்குத் தேவையான ஆதரவை வழங்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தூதுவர்கள் மற்றும் தொழில்முனைவோரை ஒருங்கிணைக்கும் செயல்முறையின் மூலம் உலக சந்தையில் பிரவேசிப்பதற்கு அரசாங்கம் வலுவான திட்டத்தைக் கொண்டுள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் உள்ள ஷங்ரி-லா உணவகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இளம் இலங்கை தொழில்முனைவோர் மன்றத்தின் 26வது ஆண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.




தடைகளால் பூட்டப்பட்ட பொருளாதாரத்திற்குப் பதிலாக, ஒரு குறிப்பிட்ட அளவிலான சுதந்திர இயக்கத்துடன் கூடிய பொருளாதாரத்தை உருவாக்க இந்த ஆண்டு பாதீட்டின் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் சுதந்திரமான இயக்கத்தை உருவாக்குவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் அபிவிருத்தியை எட்ட முடியும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்த ஆண்டு வரவு செலவு திட்டம் , பொருளாதாரத்திற்கு பாரிய அதிர்ச்சியை சந்திக்காத வகையில் தயாரிக்கப்பட்டது என்றும் கூறினார்.

பொருளாதாரம் தொடர்பான முடிவுகளை எடுக்கும் போது, ரூபாயின் பெறுமதிக்கு தாங்க முடியாத அழுத்தத்தை வழங்காது இருப்பதை உறுதி செய்வதில் தற்போதைய அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்துவதாகவும், சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளின்படி சில முடிவுகள் எடுக்க நேரிட்டுள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார்.

மன்னாரில் 50 மெகாவோர்ட் காற்றாலையை நிர்மாணிக்கவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் பாரிய அளவிலான முதலீடுகளைக் கொண்டுவரவும் தற்போதைய அரசாங்கத்தால் முடிந்துள்ளது.

முதலீட்டாளர்கள் எந்தவிதமான தரகுப்பணமும் செலுத்தாமல் முதலீடு செய்யக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்குள் மட்டுமல்ல, சர்வதேச சந்தையிலும் இளம் தொழில்முனைவோருக்குத் தேவையான பலத்தை வழங்க தற்போதைய அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



# ‘முல்லை பிரீமியர் லீக்’ இன் இறுதி ஆட்டம்
















முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தால் நடத்தப்பட்ட “முல்லை பிரீமியர் லீக்“ இன் இறுதி ஆட்டம் கடந்த சனிக் கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மருத்துவர் க.உதயசீலன் தலைமையில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகன் பிரதம விருந்தினராகவும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஆர்.விஜயகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய ஆளுநர், ”எங்கு ஆர்வம் - விருப்பம் இருக்கின்றதோ அங்கு வெற்றி – முன்னேற்றம் கிடைக்கும். விளையாட்டுக் கழகமாக இருந்தாலென்ன, எந்தவொரு நிறு வனங்களாக இருந்தாலென்ன அந்த உறுப்பினர்களின் ஆர்வத்தில்தான் அதன் வெற்றி தங்கியிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறான பிரீமியர் லீக் நடத்துவது வீரர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு மிகவும் உதவும்.

இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கும் மருத்துவர் உதயசீலன் குறிப்பிட்டமையைப் போன்று இந்தப் பிரதேச இளையோருக்காக நிரந்த மைதானம் கிடைக்கப்பெறவேண்டும். ஏனைய மாகா ணங்களில் இருப்பதைப்போன்று வளங்களைக் கொண்ட தாக அந்த மைதானம் அமையப் பெறவேண்டும்.

இன்றைய காலத்தில் இளையோர்களுக்கு விளையாட்டின் மீதான ஆர்வம் குறைந்து வருகின்றது. முன்னைய காலங்க ளில் பட்டிதொட்டி எல்லாம் விளையாடிக்கொண்டிருப்பார்கள். இப்போது அப்படிக் காண்பது அரிதாகிச் செல்கின்றது.

இவ்வாறான தொடர்களை நடத்துவதன் ஊடாக திற மையான வீரர்களை இனம்காண முடியும். அவ்வாறான வீரர்களுக்கு மேலும் சிறப்பான பயிற்சிகளை வழங்கி தேசிய ரீதியில் சாதிக்க வைக்கவேண்டும். எனவே இப்படி யான தொடர்களை நடத்தும் உங்கள் முயற்சிகளை நான் பாராட்டுகின்றேன்.” – என்றார்.

# மார்ச் மாதத்துக்கான அஸ்வெசும கொடுப்பனவு இன்று வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும்

மார்ச் மாதத்துக்கான அஸ்வெசும கொடுப்பனவு இன்று பயனாளர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 1,732,263 பயனாளர்களின் வங்கிக் கணக்குகளில் கொடுப்பனவு வரவு வைக்கப்படவுள்ளது.

இந்நிலையில் ரூ12.6 பில்லியன் வரவு வைக்கப்படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

# கதிர்காமம் விகாராதிபதி 7 மணி நேரம் வாக்குமூலம்

கதிர்காமம் கிரிவெஹெர விகாராதிபதி கொபவக்க தம் மிந்த தேரர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கதிர்காமத்தில் கட்டப்பட்டுள்ள வீடு ஒன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்கு வதற்காகக் கொபவக்க தம்மிந்த தேரர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆஜராகி யிருந்தார்.

இதன்போது, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகா ரிகள் கதிர்காமம் கிரிவெஹெர விகாராதிபதி கொபவக்க தம்மிந்த தேரரிடம் இருந்து 7 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் கதிர்காமம் கிரிவெஹெர விகாராதிபதி கொபவக்க தம்மிந்த தேரர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.



மேலும், இந்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்கு வதற்காக கதிர்காமம் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகியிருந்தமை குறிப் பிடத்தக்கது.



# குட்டித் தேர்தலில் அம்பாறையில் ‘மரம்’ சின்னத்தில் தனித்துப் போட்டி

## அமைப்பாளர்களுடனான சந்திப்பில் ஹக்கீம் தெரிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் “மரம்” சின்னத்தில் தனித்துக் களம் இறங்கவுள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒலுவில் தனியார் விடுதியில் (கிறீன் விலா) நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற கட்சியின் அமைப்பாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

“கடந்த காலங்களைப் போல் அல்லாது இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அதிகப்படியான ஆசனங்களைக் கைப்பற்றி அதிகார சபைகளை எமது ஆளுகைக்கு உட்படுத்துவது அமைப்பாளர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது. இதற்காக எமது மகளிர் அணி, இளைஞர் அணி என்பவற்றை உற்சாகப்படுத்தி பட்டியல் வேட்பாளர்களாக களம் இறக்க அத்தனை அமைப்பாளர்களும் ஒன்றுபட வேண்டும்.” – என்றார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பர், கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். எஸ். உதுமாலெப்பை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் மற்றும் கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகம் மன்சூர் ஏ. காதர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.



# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை இவ்வாரத்துக்குள் நாடாளுமன்றில்

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி அறிக்கை இந்த வாரத்துக்குள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.



# பாகிஸ்தான் ரயில் ஒன்று கடத்தல்: 182 பேர் பணய கைதிகளாக பிடிப்பு





பாகிஸ்தானில் சுமார் 400 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்ற ரயிலை மறித்த தீவிரவாதிகள், துப்பாக்கிச் சூடு நடத்திய நிலையில், சுமார் 182 பேரை பணயக் கைதிகளாக வைத்துள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது. மேலும், அந்த நாட்டு பாதுகாப்பு படையை சேர்ந்த சுமார் 20 பேரை தீவிரவாதிகள் கொன்றுள்ளனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாண தலைநகர் க்வெட்டாவில் இருந்து 400 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் கைபர் பக்துன்வா மாகாணத்தின் பெஷாவர் நகர் நோக்கி சென்றுகொண்டிருந்த ஜாஃபர் எக்ஸ்பிரஸ் ரயிலை தீவிரவாதிகள் செவ்வாய்கிழமை கடத்தினர். இதற்கு பலூச் விடுதலை இராணுவம் (Baloch Liberation Army-BLA) எனும் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்த நிலையில், பாதுகாப்பு படையை சேர்ந்த சுமார் 20 பேரை கொன்றுள்ளதாக அந்த தீவிரவாத அமைப்பு தெரிவித்துள்ளது. மேலும், தங்கள் வசம் சுமார் 182 பேர் பணயக் கைதிகளாக உள்ளனர் என அந்த அமைப்பு கூறியுள்ளது. பாதுகாப்பு படை அதிகாரிகள் தங்களை நெருங்கினால் பணய க்கைதிகள் அனைவரையும் கொல்வதாக மிரட்டல் விடுத்துள்ளது.

தங்களை தரை வழியாக இராணுவம் நெருங்க முடியாத சூழல் நிலவுவதாக பலூச் தீவிரவாத அமைப்பு கூறியுள்ளது. அந்த அளவுக்கு தங்கள் தரப்பில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. இருப்பினும் வான்வழியாக தங்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்துவதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. ஹெலிக்கொப்டர் மற்றும் ட்ரோன்களை பாகிஸ்தான் இராணுவம் இந்த தாக்குதலுக்கு பயன்படுத்தி வருகிறது.

ஜாஃபர் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணித்த பயணிகளை தொடர்பு கொள்ள முடியாத நிலை இருப்பதாக ரயில்வே துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். தீவிரவாதிகளின் இந்த செயலுக்கு இதற்கு பாகிஸ்தான் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. அரசு அதிகாரிகள் மற்றும் கூடுதல் ராணுவ படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். தீவிரவாதிகளின் இந்த கொடுஞ்செயலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் குறித்த தகவல் அதிகாரப்பூர்வமாக பாகிஸ்தான் அரசு இதுவரை தெரிவிக்காமல் உள்ளது.

9 பெட்டிகளைக் கொண்ட ஜாஃபர் எக்ஸ்பிரஸ், இன்று செவ்வாய்க்கிழமை பலுசிஸ்தான் மாகாண தலைநகர் க்வெட்டாவில் இருந்து பயணிகளுடன் கைபர் பக்துன்வா மாகாணத்தின் பெஷாவர் நகர் நோக்கி சென்றுகொண்டிருந்தது. அப்போது தீவிரவாதிகள் திடீரென ஓட்டுநரை துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில் அவர் காயமடைந்ததை அடுத்து, ரயில் தடத்தில் இருந்து விலகி உள்ளது. இதையடுத்து, ரயிலில் இருந்த பயணிகள் பதற்றமடைந்துள்ளனர். அவர்களை தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர். அப்போது, ரயிலில் இருந்த பாதுகாப்புப் படையினர், தீவிரவாதிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். தீவிரவாதிகள் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

# தென்கொரிய இராணுவத்தின் போர் பயிற்சியினை குழப்பும் நோக்கில் வடகொரியா ஏவுகணை தாக்குதல்





அமெரிக்கவுடன் இணைந்து தென்கொரிய இராணுவம் நேற்று முன்தினம் ஆரம்பித்த போர் பயிற்சியை குழப்பும் நோக்கில் வடகொரியாகடலுக்கு அடியில் பல பெலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியுள்ளதாக தென்கொரிய இராணுவம் குற்றம் சுமத்தியுள்ளது.

தென்கொரிய அரசாங்கம் நேற்று முன்தினம் பயிற்சியை ஆரம்பித்த சில மணிநேரங்களின் பின்னர் வடகொரியா இவ்வாறு ஏவுகளைகளை ஏவி தனது கோபத்தை வெளிப்படுத்தியிருந்தாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென் கொரிய மற்றும் அமெரிக்க வீரர்கள் வருடாந்த கூட்டு ராணுவ பயிற்சியை நேற்று முன்தினம் ஆரம்பமானது. 11 நாள்கள் நடைபெறும் இந்த பயிற்சியின்போது, இரு நாடுகளின் படைகளும் தங்கள் அதிநவீன ஆயுதங்கள் மற்றும் போர் திறன்களை வெளிப்படுத்தவுள்ளன. எனினும் இந்த ஏவுகணை தாக்குதலும் தமது இராணுவப்பயிற்சி என வடகொரியா அறிவித்துள்ளதுடன் தென்கொரியாவின் குற்றச்சாட்டினை மறுத்துள்ளது.

வடகொரியாவின் ஏவுகணைகள் ஹ்வாகி மாகாணத்திலிருந்து ஏவப்பட்டன. வருடத்தில் ஐந்தாவது முறையாக வடகொரியா இதுபோன்ற ஏவுகணைகளை கடற்பகுதிக்குள் ஏவியுள்ளதாக தென் கொரியாவின் கூட்டு இராணுவத் தலைவர் தெரிவித்தார்.

தென் கொரியா – அமெரிக்கா இராணுவ கூட்டுப்பயிற்சியை எதிர்த்து தென் கொரிய பாதுகாப்பு அமைச்சகத்துக்கு வெளியே போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த பயிற்சி தென்கொரியாவில் மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் என்பதால் அதை நிறுத்தமாறு போராட்டக்காரர்கள் வலியுறுத்துகின்றனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற பயிற்சியின் போது, வட கொரிய எல்லையில் உள்ள போச்சான் பகுதியில் இரண்டு தென் கொரிய போர் விமானங்கள் தவறுதலாக மக்கள் வசிக்கும் பகுதியில் குண்டுகளை வீசியுள்ளதாகவும் இதில் 30 பேர் காயமடைந்திருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், கூட்டு இராணுவ பயிற்சியும், கடலில் வடகொரியாவின் ஏவுகணை வீச்சும் குறித்த பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.





# தி.மு.கவை கண்டித்து பா.ஜ.க. ஆர்ப்பாட்டம்

## பொள்ளாச்சியில் பரபரப்பு

பொள்ளாச்சியில் தி.மு.கவை கண்டித்து பா.ஜ.கவினர் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது பொலிஸாருடன் தள்ளுமுள்ளு ஏற்பட்டதால் பரபரப்பான சூழல் உருவானது.

தமிழக மக்களவை உறுப்பினர்கள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்த மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திரா பிரதானை கண்டித்து தமிழகம் முழுவதும் தி.மு.கவினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பொள்ளாச்சியில் திமுக சார்பில் நடந்த போராட்டத்தில், எருமை மாட்டுக்கு மத்திய அமைச்சரின் புகைப்படத்தை அணிவித்து அழைத்து வந்தனர். மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திரா பிரதான் உருவப் படத்தினை செருப்பால் அடித்தும், உருவ பொம்மையை எரித்தும் போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில் தி.மு.கவினரின் செயலை கண்டித்து பொள்ளாச்சியில் நேற்று காந்தி சிலை அருகே பா.ஜ.க. கோவை தெற்கு மாவட்ட தலைவர் சந்திரசேகர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. போராட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக கூறிய பொலிஸார், பா.ஜ.கவினரை கைது செய்ய முயன்றனர். அப்போது இருதரப்புக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் பொலிஸ் ஆய்வாளர் ஒருவர் நிலைகுலைந்து கீழே விழுந்தார். அப்போது முதல்வர் ஸ்டாலினின் உருவப் படத்தினை பா.ஜ.கவினர் செருப்பால் அடித்தும், தி.மு.கவை கண்டித்து கோஷங்களை எழுப்பினர்.

இதையடுத்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த கருமத்தம்பட்டி டி.எஸ்.பி. தங்கராமன் தலைமையிலான பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கோவை தெற்கு மாவட்ட பா.ஜ.க. முன்னாள் தலைவர் வசந்த ராஜன் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்ட பா.ஜ.கவினரை கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர்.

# மொரீஷியஸ் ஜனாதிபதிக்கு மகா கும்பமேளா கங்கை நீரை பரிசளித்தார் நரேந்திர மோடி!



இரண்டு நாள் பயணமாக மொரிஷியஸ் சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டு ஜனாதிபதி தரம்பீர் கோகுலுக்கு மகா கும்பமேளா கங்கை நீரையும், மக்கானாவையும் பரிசாக அளித்துள்ளார்.

மொரீஷியஸ் ஜனாதிபதி தரம்பீர் கோகுலை, அரசு மாளிகையில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று சந்தித்தார். இந்தியா – மொரீஷியஸ் இடையே சிறப்பான மற்றும் நெருங்கிய உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். இந்தச் சூழலில், இரு நாடுகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட வரலாறும் மக்களுக்கு இடையே வலுவான இணைப்புகளும் இருப்பதை அவர்கள் நினைவுகூர்ந்தனர்.

மொரீஷியஸ் தேசிய தின கொண்டாட்டங்களில் இரண்டாவது முறையாக சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வது தமக்கு கிடைத்த கௌரவம் என்று பிரதமர் மோடி குறிப்பிட்டார். சிறப்பு அடையாளமாக, ஜனாதிபதி கோகுல் மற்றும் அவரது மனைவி விருந்தா கோகுல் ஆகியோருக்கு வெளிநாடு வாழ் இந்தியர்கள் என்ற அடையாள அட்டைகளைப் பிரதமர் வழங்கினார். ஜனாதிபதி தரம்பீர் கோகுலுக்கு மகா கும்பமேளா கங்கை நீரையும், மக்கானாவையும் பரிசாக அளித்தார்.

இந்திய அரசின் ஒத்துழைப்புடன் அரசு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆயுர்வேத தோட்டத்தையும் பிரதமர் மோடி பார்வையிட்டார். ஆயுர்வேதம் உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவத்தின் பலன்களை மேம்படுத்துவதில் இந்தியாவின் முக்கிய பங்குதாரராக மொரீஷியஸ் திகழ்கிறது என்று பிரதமர் குறிப்பிட்டார். பேச்சுவார்த்தைக்குப் பின், பிரதமரை கௌரவிக்கும் வகையில் ஜனாதிபதி கோகுல், மதிய விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

முன்னதாக, பம்பிள்மவுசஸ் தாவரவியல் பூங்காவில் உள்ள சர் சீவூசாகுர் ராம்கூலம் மற்றும் சர் அனிரூத் ஜக்நாத் ஆகியோரின் நினைவிடங்களில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று மரியாதை செலுத்தினார். அப்போது மொரீஷியஸ் பிரதமர் நவீன் சந்திர ராம்கூலமும் பிரதமருடன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், மொரீஷியஸின் முன்னேற்றம் மற்றும் இந்திய-மொரீஷியஸ் உறவுகளுக்கு வலுவான அடித்தளத்தை உருவாக்குவதில் இரு தலைவர்களின் நீடித்த மரபுகளை பிரதமர் மோடி நினைவு கூர்ந்தார்.

தொடர்ந்து, பிரதமர் மோடியும், மொரீஷியஸ் பிரதமர் நவீன்சந்திர ராம்கூலமும் வரலாற்றுச் சிறப்புமிக்க பூங்காவில் 'தாயின் பெயரில் ஒரு மரக்கன்று' என்ற முன்முயற்சியின் கீழ் ஒரு மரக்கன்றை நட்டனர்.



# டி.பி.எஸ். ஜெயராஜின் நூல் வெளியீடு

கனடாவில் வாழும் மூத்த பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் எழுதிய “அரசியல் அதிகாரத்தின் வர்க்க மாற்றம்” இலங்கையின் முதலாவது இடதுசாரி ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க “ என்ற நூலின் வெளியீட்டு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பில் நடைபெற்றது. பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம், பத்திரிகையாளர் அனந்த் பாலகிட்ணர், சமூக , அரசியல் செயற்பாட்டாளரும் சடடத்தரணியுமான சுவஸ்திகா அருலிங்கம், கொழுப்பு பல்கலைக் கழக சட்டபீட விரிவுரையாளர் பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் ஆகியோர் உட்படப் பலர் உரைநிகழ்த்தினார்கள்.







# மன்னாரில் இடம்பெற்ற தொழில் சந்தை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட் )

மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட தொழிற் சந்தை நடாத்தப்பட்டது.

இதில் மன்னார் மாவட்டம் முழுவதும் இயங்கி வரும் தொழில் வழங்கும் நிறுவனங்கள், உயர்கல்வி வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் உள்ளூர் உற்பத்தியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பங்குபற்றினார். பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், தொழில் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வேலை வாய்ப்புக்காக காத்திருந்த பல நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

மாவட்ட தொழில் சந்தைக்கு வருகை தந்த தொழில் வழங்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் தமது நிறுவனங்கள் ஊடாக எவ்வாறு தொழிலை பெற்றுக் கொள்ள முடியும் என்பது பற்றியும், அதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளித்தனர்.

அதேநேரம்உள்ளூர்உற்பத்திமுயற்சியாளர்களும் கலந்து கொண்டு தங்கள் உற்பத்திப் பொரும்களைக் காட்சிப்படுத்தியமையுடன் விற்பனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது



















# மட்டு. கரடியனாறு ம.வி. மாணவர்கள் 31 பேர் உணவு ஒவ்வாமையினால் வைத்தியசாலையில்






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கரடியனாறு மகா வித்தியாலத்தில் சிற்றுண்டிச்சாலையில் நூடில்ஸ் வாங்கி சாப்பிட்ட மாணவர்கள் உணவு ஒவ்வாமை காரணமாக வாந்தியெடுத்தனர். 31 மாணவர்கள் கரடியனாறு வைத்தியசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை பகல் அதுமதிக்கப்பட்ட நிலையில் அவர்களில் 27 பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டு. போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சிற்றுண்டிசாலையை நடத்திவந்த அதன் உரிமையாளரான பெண் சரணடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலையில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் நேற்றுக் காலை இடைவேளை நேரத்தில் இடியப்பம், புட்டு, இட்டலி, நூடில்ஸ் ஆகிய உணவுகளை மாணவர்கள் வாங்கி சாப்பிட்டுள்ளனர். இந்த நிலையில் பகல் ஒரு மணியளவில் சிற்றுண்டிசாலையில் உணவு வாங்கி சாப்பிட்ட பல மாணவர்கள் வாந்தியெடுக்க தொடங்கியமையை அடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது

தரம் 6 தொடக்கம் 10 ஆண்டுவரையிலான ஆண், பெண்கள் உட்பட 31 மாணவர்கள் கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிகிச்சையளிக்கபட்ட நிலையில் பல மாணவர்களுக்கு மயக்க நிலை ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 27 மாணவர்களை அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மூன்று அம்புலன்ஸ்கள் மூலம் மட்டு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து அங்கு சென்ற பொது சுகாதார பரிசோதகர்கள் சோதனையின் போது பழுதடைந்த நூடில்ஸ் விற்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்ட. வருகின்றனர்.

# யாழில் தேர்தல் பங்குதாரர்களுடன் மாவட்ட மட்டக் கலந்துரையாடல்



(த.சுபேசன்)

தேர்தல் செயன்முறையில் பெண்கள், இளையோர் மற்றும் குறைந்தளவு பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் குழுக்களின் ஈடுபாடு மற்றும் தேர்தல் தொடர்பான தகவல்களின் தாக்கம் பற்றிய தேர்தல் பங்குதாரர்களுடனான மாவட்ட மட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஏ.என்.என் விக்டர், நிலையத்தின் வட மாகாண ஒருங்கிணைப்பாளர் சி. அனோஜன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வ.நிக்சன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில்,

யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், பொலிஸார், ஊடகவியலாளர்கள், தேருநர்கள், தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள், அரசியல் கட்சி உறுப்பினர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களின் பங்குபற்றுதலுடன் இக்கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, யுத்தக் குற்றங்களுக்கு அரசியல் நீதி கிட்டுவதற்கு சர்வதேசத்தின் தலையீடு மிக அவசியம்

## அருட்தந்தை மா.சத்திவேல் வலியுறுத்து

(கனகராசா சரவணன்)

தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் போன்ற விடயங்கள் மற்றும் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும். அதனை மறுப்பவர்கள் குற்றவாளிகள் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அருட்தந்தை மா.சத்திவேல் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

முன்னாள் பிரதம மந்திரியும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவோடு அல்ஜசீரா ஊடகவியலாளர் நடாத்திய நேர்காணலைத் தொடர்ந்து தெற்கில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக மக்களின் கொந்தளிப்பு எழுந்துள்ளது.

படலந்த வதை முகாமை மையமாக வைத்து அதற்கு காரணமான பிரதான சூத்திரதாரியான ரணிலின் "சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை பறிக்க வேண்டும்" எனும் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கையில், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனக் கூறுவதில் எவ்வாறு நம்பிக்கை வைப்பது? ஒரு குற்றவாளி இன்னும் ஒரு குற்றவாளியை விசாரிக்க முடியுமா? அவ்வாறு விசாரித்தாலும் அது அரசியல் நோக்கம் கொண்டதாகவே இருக்கும்.

தெற்கில் ரணிலிற்கு எதிரான மனநிலை பட்டலந்தை வதை முகாமை பற்றியதாகவே மட்டும் உருவாகி இருப்பதும் இனவாதத் தன்மையை வெளிப்படுத்துகின்றது.

யுத்த காலப்பகுதி தொடர்பிலும் யுத்த இறுதி கட்டத்தில் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தவை தொடர்பிலும் அப்பேட்டியில் கேள்விகள் கேட்கப்பட்டன.

அவற்றிற்கும் பதில் அளிக்க ரணில் தடுமாறியதே நாம் அறிவோம். ஆனால் அதைப் பற்றி எல்லாம் கரிசனையோ அக்கறையோ இல்லாத மனநிலையையும், படலந்த குற்றங்களை முன்னிலைப்படுத்தி தண்டிக்கப்பட வேண்டும் எனக் கோருவது பக்க சார்பானதும் இன வாத மனநிலையை கொண்டது மாகும்.



அல்ஜசீரா ஊடகவியலாளர் தெற்கிலும் வடக்கிலும் நிகழ்த்தப்பட்ட வதைகள், கொடூரங்கள், யுத்தக் காலப் பகுதி குற்றங்கள் தொடர்பிலும் கேள்விக்கணைகள் தொடுகின்ற போது தெற்கு சார்ந்து மட்டும் சிந்திப்பதும் தமிழர் தேசத்தில் நிகழ்த்தப்பட்ட யுத்த குற்றங்கள் தொடர்பில் கருத்துக்கள் வெளியிடாது இருப்பது இங்கு இரண்டு நாடுகள் உள்ளன என்பதையே காட்டி நிற்கின்றது.

இரண்டு நாடுகள் என்றாலும் அநியாயத்துக்கு எதிராக குரல் கொடுப்பது ஒவ்வொருவரினதும் தார்மீக பொறுப்பாகும். தற்போதும் அதனை காண முடியாமல் இருப்பது இனவாத அவல நிலையையே மீண்டும் உணர்த்துகின்றது.

படலந்த முகாமோடு தொடர்புபட்டவர்கள், அதற்கு துணை நின்ற பாதுகாப்பு தரப்பினரும் நீதி முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியவர்களே. அதில் மாற்றுக் கருத்து இல்லை. காலம் கடந்தேனும் நீதி நிலைநாட்டப்படல் வேண்டும். உண்மை முழு நாட்டுக்கும் தெரிய வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 1988 - 89 காலப்பகுதியில் மாத்தளை பிரதேசத்தில் இராணுவத்திற்குத் தலைமை தாங்கிய போது அங்கு கொண்டு செல்லப்பட்டு புதைக்கப்பட்டவர்களின் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

தெற்கில் மேலும் பல மனிதப் புதைகுழிகள் தொடர்பான அறிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இது தொடர்பான அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட்ட போதும் அது தொடர்பில் தற்போதைய தேசிய மக்கள் சக்தியான மக்கள் முன்னணி வாய் திறக்காமல் அமைதி காத்து விட்டு, தற்போது ரணில் மீது விசாரணை எனக் கூறுவது அரசியல் நாடகமாக அமையக்கூடாது.

ஊடகவியலாளர் திஸநாயகத்தின் உதவியோடு 1988 - 89 காலப்பகுதியில் நிகழ்ந்த மனித உரிமை மீறல் தொடர்பான அறிக்கைகளை தூக்கிக் கொண்டு மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை நோக்கி ஓடியமையை மறக்க முடியாது.

அதே மஹிந்த ராஜபக்ஷ, திஸநாயகத்திற்கு 20 வருட தண்டனையை பெற்றுக் கொடுத்தமையும், சர்வதேச தலையீட்டின் காரணமாக அவர் விடுதலை பெற்றமையும் மறக்க முடியாதவை.

படலந்த கொலைகளை காரணம் காட்டி ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் இது தொடர்பில் சந்திரிகா பண்டாரநாயக்கரும் மஹிந்த ராஜபக்ஷவும் அமைதி காத்தமையை கொலைக் குற்றவாளிகளைப் பாதுகாத்ததாகவே கருதப்பட வேண்டும். அவர்களும் ரணிலும் கொலை குற்றவாளிகளே, தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

சந்திரிகா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ் ஆகியோர் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்திய யுத்தம், அவர்களால் புரியப்பட்ட கொலைகள், படலந்த விடயத்தை விசாரணைக்கு உட்படுத்தாதததை மறைத்து விட்டது.

தெற்கு இனவாத யுத்தத்தில் மூழ்கி இருந்தது. இனவாதம் தெற்கின் கண்களை மறைத்து நீதியை புதைத்து விட்டது என்றும் கூறலாம்.

இவ்வாறு மறைத்தவர்களும் பட்டலந்தை கொலையாளிகளே. அல் ஜாசீரா ஊடகவியலாளர் கேள்விகளை கேட்கவில்லையேல் தற்போதும் நீதிக்கான குரல் எழுந்திருக்காது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் ரணிலுக்கு எதிரான விசாரணை எனக் கூறும் தேசிய மக்கள் சக்தியாகிய மக்கள் விடுதலை முன்னணியும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

தண்டிக்கப்பட வேண்டியவர்கள் சந்திரிகாவையும் மஹிந்தவையும் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்திற்கு பலவந்தமாக தள்ளி,தமது முன்னணி

தொடர்ச்சி ▼

# தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, யுத்தக் குற்றங்களுக்கு அரசியல் நீதி கிட்டுவதற்கு சர்வதேசத்தின் தலையீடு மிக அவசியம்

**தொடர்ச்சி▲**

உறுப்பினர்களையும் சாதாரண கிராமிய இளைஞர்களையும் இனவாதத் திற்குள் தள்ளி, தமிழர்களை இனப் படுகொலை புரிந்த இவர்களும் தண்டனைக்குரியவர்களே.

தற்போதைய ஆட்சியாளர் ரணிலுக்கு எதிராக விசாரணை நடத்துவார்கள் எனக் கூறுவது போல், தங்கள் மனசாட்சியை தொட்டு தங்களுக்கு எதிராக விசாரணை நடத்தினால் மட்டுமே இவர்களின் கிளீன் சிறீலங்கா விற்கு நீதி கிட்டும். இல்லையேல் அதுவும் போலியே.

தற்போதைய ஆட்சியாளர் வடக்கு கிழக்கில் நிகழ்ந்த யுத்தம் தொடர்பாக உள்ளக விசாரணை என்பதற்குள் சர்வதேசத்தின் எந்த தலையீட்டையும் ஏற்க மாட்டோம் என்று கூறுவதற்கும் காரணம் இவர்கள் மீதும் கொலை குற்றச்சாட்டுகள் விழும் என்பதன் காரணமாகவே.

கடந்த ஆட்சியாளர்களை போல பாதுகாப்பு படையினரைப் பாதுகாக்கும் நோக்கமேயாகும். சர்வதேச விசாரணைக்கு மறுப்பு தெரிவிப்பவர்களும் கொலைக் குற்றவாளிகளே.

இலங்கை வரலாற்றில் எல்லாக் காலப்பகுதிகளிலும் நிகழ்த்தப்பட்ட இன சுத்திகரிப்பு, இனப்படுகொலை, யுத்த குற்றங்கள் எல்லாவற்றுக்கும் இதய சுத்தியோடு விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அதற்கான தகுதி இலங்கைக்கு இல்லை என்பதே தமிழர்களின் கடந்த கால நிகழ்கால அனுபவமாகும். அதனாலையே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் யுத்த குற்றம் விசாரிக்கப்பட வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

அரசியல் நீதி கிடைக்க வேண்டும் என்று தமிழர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது இன்று வரை செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது.

இதுவரை காலமும் பட்டலந்த வதைமுகாம் தொடர்பாக அமைதி காத்தவர்கள் எல்லாம் இன்று வாய் திறக்கிறார்கள் எனில் அதற்கு அல் ஜஸீரா சர்வதேச ஊடகமே காரணமாகும்.

அதைப் போன்று தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலை, யுத்தக் குற்றங்கள் போன்ற விடயங்கள் மற்றும் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும். அதனை மறுப்பவர்கள் குற்றவாளிகள், கொலையாளிகள், இனவாதிகள் என்பதே உண்மை. – என அந்த அறிக்கையில் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.




# மனநோயாளர் சிகிச்சை பெற்று வந்த பெண்ணின் மீது தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் பாலியல் வன்கொடுமை

தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் மனநோயாளர் சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவரைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படும் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வைத்தியசாலை தரப்பினரால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெல்லிப்பளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அந்த வைத்தியசாலையில் துப்பரவுப் பணியில் ஈடுபட்டு வந்த 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், அந்தப் பெண் வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# வவுனியாவில் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் முதல் தடவையாக இலத்திரனியல் முறைமையில்

(கி.வசந்தன்)

இலங்கையில் முதன்முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தினூடாக வாக்களிப்பு மேற்கொண்டு வவுனியா மாணவன் சாதனை படைத்துள்ளார்.

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் நேற்று இடம்பெற்ற மாணவர் நாடாளுமன்ற தேர்தலுக்கே இலத்திரனியல் முறையில் வாக்களிப்பு இடம்பெற்றது.

பாடசாலை மட்டத்தில் மாணவர் நாடளுமன்றத் தேர்தல் தற்போது இடம் பெற்று வருகின்றது. இந்நிலையில் வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவன் கபிலாசால் அண்மையில் புத்தாக்க போட்டிக்காக கண்டுபிடிக்கப்பட்டு தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்களிப்பு இயந்திரத்தை பயன்படுத்தி வாக்களிப்பு செயற்பாடு இடம்பெற்றிருந்தது.

மாணவனினால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் இலங்கையின் முதல் முறையாக ஒரு தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தமை இதுவே முதல் தடவையாகும்.

இலங்கை தேர்தல் முறையில் கடதாசி பாவனை இல்லாது இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கோடு இந்த மாணவரினால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த பொறிமுறை முதன் முறையாக மாணவர் நாடாளுமன்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த ஆரம்ப நிகழ்வில் வவுனியா உதவி தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ், வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், பாடசாலை அதிபர், அயல் பாடசாலை அதிபர்கள், கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் முன்னிலையில் வாக்களிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டதோடு வாக்களிப்பும் இடம்பெற்றிருந்தது. இதன்பின்னர் குறுகிய நேரத்தில் முடிவுகள் வெளியிடப்பட்டிருந்தமையும் விசேட அம்சமாகும்.













# இன்றைய ராசி பலன்கள் - 12.03.2025




இன்று தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். இன்று நன்மை, தீமை இரண்டும் கலந்து காணப்படும். இதிலிருந்து பயனுள்ளதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இன்று சூழ்நிலை அந்தளவு சாதகமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை ஏற்படும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வெற்றிகரமாக ஏற்படுத்த அனுசரித்து போகும் அணுகுமுறை தேவை.

ஆன்மீக நோக்கத்துக்கும் பயணத்துக்கும் பணத்தை செலவு செய்வீர்கள். இதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

கண்ணுக்கான சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பல்வலிக்கான வாய்ப்பும் உள்ளது.




நீங்கள் எடுக்கும் முயற்சியில் தடைகளைக் காண்பீர்கள். அதிக சிந்தனையை தவிர்க்க வேண்டும் உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். இன்றைய சூழ்நிலையை சமாளிப்பதை சற்றுக் கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மோதல் நேரலாம். அமைதியாகவும் சூழ்நிலைக்கேற்றவாறும் இருந்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணம் போதுமானதாக காணப்படாது. பணம் இழந்துவிடுவோமோ என்ற பயம் உங்களிடம் காணப்படும்.

முதுகுவலி ஏற்பட வாயுப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கலாம். உங்கள் நண்பர்களை வெல்வீர்கள். இது பயன்தரத் தக்கதாக இருக்கும். நேர்மறையான மன நிலையோடு இன்றைய தினத்தில் செயல்களை மேற்கொள்வீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியில் உங்களை மேம்படுத்திக்கொள்ள மிகுந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்களுக்கு நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். நேர்மையான அணுகுமுறை மூலம் இது சாத்தியமாகும்.

பணம் அதிக அளவில் காணப்படும். சாதுரியமாகப் பணத்தைச் செலவு செய்ய இன்றைய நாளை பயன்படுத்துவீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும்.




இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். வேதனைப்படும் சூழ்நிலைகள் உருவாகும். நண்பர்களின் ஆதரவு குறையும். சற்று கவனமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் கவலை ஏற்படும்.

உங்களின் அமைதியற்ற மனநிலை உறவை பாதிக்கும். நல்ல புரிந்துணர்வுக்கு உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று சிறிதளவு பணமே காணப்படும். அதிகமாக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். வீட்டின் புனரமைப்புக்கான செலவாக அது இருக்கலாம்.

இன்று காய்ச்சலுக்கு ஆளாக நேரலாம். ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை.




இன்று பொறுப்புகளை அதிகமாக சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். என்றாலும் உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் இதனை சமாளிப்பீர்கள்.

கடின உழைப்பு காணப்படுகின்றது. என்றாலும் நீங்கள் வெற்றி பெற இயலாது. முறையாக திட்டமிடாததே இதற்கு காரணமாக இருக்கும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இந்த உணர்வு உங்கள் உறவை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது. நிதிநிலையை நன்கு பராமரிக்க வேண்டும். லாபமும் இருக்காது. நஷ்டமும் இருக்காது.

இன்று பதற்றம் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் அதன் தாக்கம் காணப்படும். எனவே அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.




இன்று சில சாதகமற்ற பலன்கள் கிடைக்கும். உங்கள் வாழ்வில் சில மாற்றங்களை சந்திப்பீர்கள். பயணங்கள் காணப்படும். தெளிவான மனதுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணி நிமித்த பயணம் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். இதனால் உறவில் புரிந்துணர்வை பாதிகாக்க முடியும்.

இன்று பண வரவு குறைவாக காணப்படும்.குடும்பத்திற்காக உங்களிடம் உள்ள பணத்தை செலவு செய்வீர்கள்.

தூக்கப் பிரச்சினை காரணமாக இன்று உங்களிடம் பதற்றம் காணப்படும்.




உங்கள் மகிழ்ச்சி மற்றும் சௌகரியங்களை வளர்த்துக் கொள்வீர்கள். என்றாலும் சில தடைகளை நீங்கள் சந்திப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக்கொள்ள இன்றைய நாளை பயன்படுத்துங்கள்.

சில தடைகளுக்குப் பிறகு வெற்றி காண்பீர்கள். திட்டமிட்டு சிறப்பாக பணியாற்றினால் இன்று உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் வாய்ப்பு உள்ளது. நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். சிறு கடன் வகையில் இன்று பண வரவு காணப்படும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சனை ஏதும் காணப்படாது.




இன்று சிறப்பான நாள். எதிர்பாராத நன்மைகள் ஏற்படும் நாள். உங்கள் சமயோசித புத்தி மூலம் இன்றைய நாளை கழிப்பீர்கள்.

உங்கள் பணியின் தரம் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணிகளை ஆற்றும் போது உங்கள் அணுகுமுறையில் வேகம் காணப்படும்.

இன்று மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இன்றைய நாளையும் மகிழ்ச்சியாக்குவீர்கள்.

பணபுழக்கம் போதுமானதாக இருக்கும். காப்பீடு மற்றும் பூர்வீக சொத்து மூலம் உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். எனவே ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.03.2025




இன்று வெற்றி காண்பதற்கு அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டியது அவசியம். அவசர முடிவுகள் இன்று எந்தப் பயனையும் அளிக்காது.

பணியில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் சரியாக திட்டமிட வேண்டும். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கண்டிப்பும் கறாருமாக இருப்பீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். சகஜமான அணுகுமுறை மூலம் உறவில் நெருக்கம் காணலாம்.

பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும். பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று ஆக்க பூர்வமான நாளாக இருக்கும். திறமை மூலம் நல்ல பலன்களைப் பெறலாம். நீண்ட கால திட்டங்களுக்கு இன்றைய நாளைப் பயன்படுத்தலாம். ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்பிற்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடிவெடுப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் அவசரப் போக்கு காரணமாக இன்று நீங்கள் பல வாய்ப்புகளை இழக்க நேரும். புத்திசாலித்தனமாக இருப்பது நல்லது. விவேகத்துடன் நடந்து கொள்வது நல்லது.

பணியிடத்தில் இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். பணியை இழப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்களிடம் பாதுப்பின்மை உணர்வு காணப்படும். இதை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வு இந்நாளின் மகிழ்ச்சியைப் பாதிக்கும்.

உங்கள் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக பணத்தை இழப்பீர்கள். இன்று நிதி வளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும்.

பதற்றம் காரணமாக இன்று முதுகுவலி காணப்படும்.




இன்று நீங்கள் எடுக்கும் முயற்சியில் நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களுக்கு வெற்றி எளிதில் நிச்சயம் கிடைக்கும்.

இன்று பணிகள் சுமுகமாக நடக்கும். பணியில் முன்னேற்றம் காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வளர்த்துக் கொள்வீர்கள். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ள இது உதவும்.

பணம் அபரிமிதமாக காணப்படும். ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் பண வரவுக்கு வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.

# யாழ் மாவட்டத்தின் சகல சபைகளுக்கும் தமிழரசு நேற்று கட்டுப் பணம் கட்டியது!





(ந.லோகதயாளன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சகல சபைகளிற்கும் தமிழ் அரசுக் கட்சி சார்பில் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனால் நேற்றுக் கட்டுப் பணம் செலுத்தப்பட்டது.

உள்ளூர் அதிகார சபைக்கான தேர்தலிற்கான வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வகையில் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தற்போது கட்டுப் பணம் செலுத்தி வருகின்றன. இதற்கமையவே நேற்றைய தினம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய 3 நகர சபைகளுடன் 13 பிரதேச சபைகளுமாக மொத்தம் 17 உள்ளூராட்சி சபைகளிற்கும் கட்டுப் பணம் செலுத்தப்பட்டது.